IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 63/2019 |
| | | D/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Karuppusamy | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **14-03-2023**

## CHIEF EXAMINATION :

நான் இவ்வழக்கில் பிரதிவாதி ஆவேன். மேலும், இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் 1வது சாட்சி ஆவேன். மேற்படி வழக்கில் எனது தரப்பில் பிரமான வாக்கு மூலம் தாக்கல் செய்கிறேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமான வாக்கு மூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் யாவும் உண்மை என்றும், அதில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றும் உளமாற உறுதி அளிக்கிறேன். என்னால் அளிக்கக்கூடிய சாட்சியம் மற்றும் ஆவணங்கள் உண்மையானவை என உறுதியளிக்கிறேன்.

முதல் விசாரணை (பி.வா.சா.1 ஆஜர்.) சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.

| வ.எண் | தேதி | ஆவணங்கள் | குறியீட்டு எண் |
|---|---|---|---|
| 1 | 24.06.2019 | தாவா சொத்து குறித்து என்னுடைய முந்தைய உரிமையாளர் மீனாட்சியம்மாள் பெயரில் உள்ள அடங்கல் ஆவணத்தின் வாடிப்பட்டி தலைமையிடத்து துணை வட்டாட்சியரால் 1385ம் பசலிக்கு சர்வே எண்.80/6ஏ-க்கு வழங்கப்பட்ட அடங்கல் ஆவணத்தின் சான்றிட்ட ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்திட கேட்டுக்கொள்கிறேன். | பி.வா.சா.ஆ.1 |
| 2 | 18.06.2019 | பட்டா எண்.482க்கு சர்வே எண்.80/6ஏ2-க்கு என்னுடைய மூத்த சகோதரர் ராமசாமிமணியம் உள்பட பல்வேறு நபர்கள் பெயரில் உள்ள கூட்டுப்பட்டாவின் இணையதள கணினி ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்திட கேட்டுக்கொள்கிறேன். | பி.வா.சா.ஆ,2 |
| 3 | -- | தாவா சொத்தில் உள்ள குடியிருப்பு வீட்டிற்கு என்னுடைய பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் எண்ணிக்கை 13 தாக்கல் செய்கிறேன். மேற்படி | பி.வா.சா.ஆ.3 |

| | | | |
|---|---|---|---|
| | | ஆவணத்தை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்திட கேட்டுக்கொள்கிறேன். | |
| 4 | -- | தாவா சொத்தில் குடிநீர் இணைப்பிற்கான எனது பெயரில் உள்ள தண்ணீர் கட்டண ரசீது எண்ணிக்கை 2 தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்திட கேட்டுக்கொள்கிறேன். | பி.வா.சா.ஆ.4 |
| 5 | -- | தாவா சொத்தில் மின் இணைப்பு உள்ளதற்காகவும், மேற்படி மின் இணைப்பிற்கான எனது பெயரில் உள்ள மின் கட்டண ரசீது எண்ணிக்கை 19 தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்திட கேட்டுக்கொள்கிறேன். | பி.வா.சா.ஆ.5 |
| 6 | -- | தாவா சொத்தின் பூஸ்துதி அமைப்பை காட்டக்கூடிய புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு தாக்கல் செய்கிறேன். | -- |
| 7 | -- | 2019 – 2020 மற்றும் 2020 – 2021 ஆகிய கால கட்டங்களுக்கு என்னால் வீட்டு வரி செலுத்தப்பட்டதற்கான எனது பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்திட கேட்டுக்கொள்கிறேன். | பி.வா.சா.ஆ.6 |
| 8 | 19.01.2021 | தாவா சொத்திற்கு மின் கட்டணம் செலுத்தியதற்கான எனது பெயரில் உள்ள மின் கட்டண ரசீது தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்திட கேட்டுக்கொள்கிறேன். | பி.வா.சா.ஆ,7 |
| 9 | -- | தாவா சொத்தில் உள்ள ஓட்டுவில்லை வீட்டை இடித்துவிட்டு புதிய வீடு கட்டியதற்கான அழைப்பிதழ் ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். | -- |

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவு பிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி